இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 11-05-2023

# மணிப்பூர் எரிவது ஏன்? 2

*** இசுலாமியர் இடஒதுக்கீடு பறிப்பு**

*** மதச்சிறுபான்மையினரையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோரையும் மோத விடும் போக்கு**

*** பட்டியலின மக்களுக்குள் ஏற்படுத்திய பாகுபாடுகள் இவை அனைத்தும் கர்நாடக தேர்தல் அரசியல் லாபத்துக்காகச் செய்யப்பட்டுள்ளன. 'சோஷியல் இன்ஜினியரிங்' என்ற பெயரால் சமூக அமைதியைக் குலைக்கும் முயற்சிகள் ஆகும். இதனைத்தான் மணிப்பூரிலும் செய்திருக்கிறது பா.ஜ.க. அரசு.**

மணிப்பூரில் பழங்குடியினர் இடஒதுக்கீடு விவகாரம்தான் இந்தக் கலவரங்களுக்குக் காரணம். மாநிலத்தில் 53 சதவிகிதமாக உள்ள மைதேயி சமூகத்தினர் தங்களுக்கு பழங்குடியின தகுதி கோரி வருகிறார்கள். மாநில மக்கள் தொகையில் 40 சதவிகிதம் உள்ள நாகா, குக்கி பிரிவினர் இதற்கு கடுமையான எதிர்ப்பை தெரிவித்து வருகிறார்கள். மைதேயி குக்கி ஆகிய இரண்டு பிரிவினரும் மாறுபட்ட மதத்தைச் சேர்ந்தவர்கள். அதனால் விரிசல் அதிகம் ஆக்கப்பட்டு விட்டது. மைதேயி பிரிவினர் இதுவரை ஓ.பி.சி. பிரிவில் உள்ளனர். அவர்களை பழங்குடி பட்டியலில் சேர்த்தால் தங்களது வாய்ப்புகள் பறிபோகும் என குக்கி பிரிவினர் நினைக்கிறார்கள்.

**கடந்த மார்ச் 27 ஆம் தேதி, எஸ்.டி. பட்டியலில் மைதேயி பிரிவைச் சேர்ப்பதற்கான பரிந்துரைகளை ஒன்றிய அரசுக்கு சமர்ப்பிக்க மணிப்பூர் மாநில அரசுக்கு மணிப்பூர் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த கோரிக்கையை முன் வைத்து மைதேயி பிரிவைச் சேர்ந்த இடஒதுக்கீடு ஆர்வலர்கள் தாக்கல் செய்த பல மனுக்களை விசாரித்து நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. இவை மிகப்பெரிய மோதலுக்கு வழிவகுத்து விட்டது.**

மாநிலத்தில் உள்ள 10 மலைப் பகுதி மாவட்டங்களில் பழங்குடியின மாணவர் சங்கம் சார்பில் பேரணி நடத்தப்பட்டது. அதில் இருந்து வன்முறைகள் பரவியது. இதனை மாநில பா.ஜ.க. அரசு சரியாகக் கையாளவில்லை என்று ஒன்றிய உள்துறை அமைச்சகம் கோபம் கொள்வதாக செய்திகள் வெளியாகி உள்ளன. இத்தகைய மோதல் எழப்போவதை மாநில அரசு சரியாக கணிக்கவில்லை என்றும் சொல்லப்படுகிறது. 'மாநில அரசு வேகமாகச் செயல்பட்டிருக்க வேண்டும்' என்று உள்துறை அதிகாரிகள் சொல்லி இருக்கிறார்கள். மைதேயி இனத்தவர் கோரிக்கைக்கு எதிராக குக்கி இனத்தவர் தொடர்ந்து போராடி வருகிறார்கள். மே 3 ஆம் தேதி நடந்த சுராசந்த்பூர் பேரணியில் 80 ஆயிரம் பேர் கூடியிருந்தார்கள். குக்கி இன மக்கள் பெரும்பான்மை வசிக்கும் மாவட்டம் இது.

சுராசந்த்பூர் மாவட்டத்தைத் தவிர, சேனாபதி, உக்ருல், காங்போகபி, தமெங்லாங், சந்தேல் மற்றும் தெங்னௌபால் உள்ளிட்ட எல்லா மலை மாவட்டங்களிலும் இத்தகைய பேரணிகள் நடத்தப்பட்டன. டார்பாங் பகுதியில் நடந்த 'பழங்குடியினர் ஒற்றுமை அணிவகுப்பு' பேரணியில் ஆயிரக்கணக்கான கிளர்ச்சியாளர்கள் கலந்துகொண்டனர். அதன் பிறகு பழங்குடி குழுக்களுக்கும் பழங்குடியினர் அல்லாத குழுக்களுக்கும் இடையே மோதல்கள் வெடித்தன. பெரும்பாலான வன்முறை சம்பவங்கள் விஷ்ணுபூர் மற்றும் சுராசந்த்பூர் மாவட்டங்களில் நடந்துள்ளன.

**மணிப்பூரின் பழைய வரலாறுகளை அறிந்தவர்களுக்குத் தெரியும். அது பல ஆயுதக் குழுக்கள் செயல்பட்ட மாநிலம் ஆகும். அரசாங்கத்துடன் போர் நிறுத்தம் செய்து கையெழுத்துப் போட்டு அமைதியாக பல குழுக்கள் இன்னமும் இருக்கும் மாநிலம் அது. துப்பாக்கிகள் சர்வ சாதாரணமாகக் கிடைக்கும். எனவே இப்போதைய போராட்டக்காரர்களுக்கும் துப்பாக்கிகள் எளிதில் கிடைத்துள்ளது.**

இது மட்டுமல்லாமல் மியான்மரில் ராணுவ ஒடுக்குமுறையைத் தொடர்ந்து, மணிப்பூர் மற்றும் மிசோரம் ஆகிய எல்லையோர மாவட்டங்களில் நாட்டிலிருந்து அகதிகள் கணிசமான அளவில் குவிந்துள்ளதாகவும் சொல்கிறார்கள். இந்த மாவட்டங்களில் வசிப்பவர்கள் அகதிகளுடன் இன ஒற்றுமையைப் பகிர்ந்து கொள்வதால், புதிய குடியேறியவர்களுக்கு உள்ளூர் மக்களிடமிருந்து சிறிய எதிர்ப்பு உள்ளது. சுராசந்த்பூர் போன்ற மாவட்டங்களில் குடியேறியவர்களில் பெரும்பாலானோர் குக்கி அகதிகள் என்றும் சொல்கிறார்கள். இந்த அகதிகளை வெளியேற்ற பா.ஜ.க. அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு எதிர்வினையாகவும் இவை நடப்பதாகச் சொல்கிறார்கள்.

**"மாநிலத்தில் இந்த வன்முறை ஒரு நாளில் வெடித்தது அல்ல. மாறாக பல விஷயங்கள் தொடர்பாக பழங்குடியினரிடையே முன்பே கோபம் நிலவி வருகிறது. வனப்பகுதிகளில் பல பழங்குடியினரிடம் இருந்து நிலங்கள் மீட்கப்படுகின்றன. இதில் குக்கி பிரிவைச் சேர்ந்தவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். வன்முறை வெடித்த இடம் சூராசந்த்பூர் பகுதி. குக்கிகளால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. இந்த எல்லா விஷயங்கள் தொடர்பாகவும் அங்கு பதற்றம் ஏற்பட்டது," என்று அம்மாநில மூத்த செய்தியாளர் பிரதீப் ஃபன்ஜோபம் கூறியதாக செய்தி வெளியாகி உள்ளது.**

மைதேயி சமூகத்தினர் அனைவருமே தங்களை பழங்குடி பட்டியலில் சேர்க்கும் கோரிக்கையை ஏற்கவில்லை. சிலர் ஏற்கிறார்கள். சிலர் மறுக்கிறார்கள். எனவே அதுவே குழப்பமான கோரிக்கையாக உள்ளது. இது பத்து ஆண்டுகளாக உள்ள கோரிக்கை. இதுவரை இருந்த அரசுகள் அதில் முடிவெடுக்கவில்லை. இப்போதைய பா.ஜ.க. அரசு அதில் முனைப்பு காட்டத் தொடங்கி இருப்பதாக அனைத்து பழங்குடி மாணவர் சங்கம் நினைக்கிறது.

**மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, "இது அரசியலுக்கான நேரம் அல்ல. அரசியலும் தேர்தலும் காத்திருக்கலாம். ஆனால் நமது அழகிய மாநிலமான மணிப்பூரைக் காப்பாற்றுவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார். பிரபல குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம் தீ வைப்பு தொடர்பான சில படங்களை பகிர்ந்துள்ளார். அதில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரை டேக் செய்து, "மணிப்பூர் எரிகிறது, தயவுசெய்து உதவுங்கள்" என்று எழுதியுள்ளார்.**

ஒரு வாரமாக நடக்கும் வன்முறைகளை மாநில பா.ஜ.க. அரசும், ஒன்றிய பா.ஜ.க. அரசும் கவலையுடன் பார்த்ததாகத் தெரியவில்லை.

●●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.05.2023) முகாம் அலுவலகத்தில், பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற திண்டுக்கல், அண்ணாமலையார் மில்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி ச.நந்தினி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பள்ளிக்கல்வித் துறை ஆணையர் க.நந்தகுமார், அண்ணாமலையார் மில்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியை மற்றும் அம்மாணவியின் பெற்றோர் உடனிருந்தனர்.

### மாநில அளவில் முதலிடம் பெற்று சாதனை படைத்த

# மாணவி நந்தினியை நேரில் அழைத்து முதல்வர் வாழ்த்து!

## அனைத்து பாடங்களிலும் 100/100 மதிப்பெண் பெற்றவர்!

சென்னை, மே 11 -

பன்னிரண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவி செல்வி ச.நந்தினி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.5.2023) முகாம் அலுவலகத்தில், பன்னிரண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற திண்டுக்கல், அண்ணாமலையார் மில்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி ச.நந்தினி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

பள்ளிக்கல்வித் துறையால் பன்னிரண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு முடிவுகள் மே 8 அன்று வெளியிடப்பட்டது. இத்தேர்வில் மாநிலம் முழுவதும் 94.03 சதவிகிதம் மாணவ, மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் மாணவிகள் 96.38 சதவிகிதமும், மாணவர்கள் 91.45 சதவிகிதமும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

திண்டுக்கல், அண்ணாமலையார் மில்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் வணிகவியல் மாணவி செல்வி ச.நந்தினி அனைத்து பாடங்களி லும் முழு மதிப்பெண்ணான 600க்கு 600 மதிப்பெண் பெற்று மாநில அளவில் முதல் இடம் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

மாணவி செல்வி ச.நந்தினி முதலமைச்சர் அவர்களை தன் பெற்றோர் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியையுடன் நேற்று முன்தினம் (9.5.2023) முகாம் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

அப்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அம்மாணவியிடம் உயர்கல்வி பயில்வதற்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பள்ளிக்கல்வித் துறை ஆணையர் க.நந்தகுமார் உடனிருந்தனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் இல்லத்தில் நடைபெறுகிறது!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பகுதிச் செயலாளர் கூ.பீ.ஜெயின் இல்ல மணவிழா!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன் எம்.பி - முன்னணியினர் பங்கேற்பு!

*சென்னை, மே 11 -*

*சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி கழகச் செயலாளரும், 8 வது மண்டலக் குழு தலைவர் கூ.பீ.ஜெயின் கே.ஜெ.ஹெலன் ராணி ஆகியோரின் புதல்வி கே.ஜெ.ஜெனிக்கும், சென்னை, பல்லவன்நகர், நெற்குன்றம், டி.கே.ராஜூ ரா.சுமங்களா ராஜூ ஆகியோரின் புதல்வர் ரா.மணிகண்டனுக்கும் மணவிழா இன்று (11.5.2023 - வியாழக்கிழமை) காலை 7.30 மணியளவில், ஆழ்வார்பேட்டை, சித்தரஞ்சன் சாலையில் அமைந்துள்ள கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இல்லத்தில் நடைபெறுகிறது.*

*இம்மணவிழாவை முதல்வர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைத்து வாழ்த்துகிறார்.*



*நாளை மாலை 6 மணியளவில், கொரட்டூர், மோகன் கார்டன் திருமண மண்டபத்தில் திருமண வரவேற்பு விழா நடைபெறுகிறது.*

*மணவிழா வரவேற்பில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமை வகிக்கிறார்.*

*கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், கழக பொறியாளர் அணி துணைச் செயலாளர் அ.வெற்றியழகன் எம்.எல்.ஏ, அம்பத்தூர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் தலைவர் ப.ரங்கநாதன், 7 வது மண்டலக்குழுத் தலைவர் பி.கே.மூர்த்தி எம்.சி, த.மா.கா. மாநில பொதுச் செயலாளர் வி.பி.ஜவஹர்பாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*வில்லிவாக்கம் கிழக்குப் பகுதிச் செயலாளர் வே.வாசு, அம்பத்தூர் கிழக்கு பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ், அம்பத்தூர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.*

*திருமண வரவேற்பு விழாவில் இந்நாள் முன்னாள் ஒன்றிய, மாநில அமைச்சர் பெருமக்கள், மாவட்ட கழக செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள்,*

*மண்டலக்குழுத் தலைவர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாநில, மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் பலர் கலந்து கொள்கின்றனர்.*

### திராவிட இயக்கத்தின் முன்னோடி

# காஞ்சி மணிமொழியார் 123 வது பிறந்தநாள் விழா!

*சென்னை, மே 11-*

*திராவிட இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் நிதிக்குழுச் செயலாளராகவும் (பொருளாளர்). தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளராக சிறப்பக பணியாற்றியவரும் ஒருங்கிணைந்த இன்றைய தியாகராயர் நகர் மற்றும் சைதாப்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினராக புகழோடு விளங்கியவர் பெரியவர் காஞ்சி மணிமொழியார் அவர்களின் 123 வது பிறந்தநாள் விழா 9.5.2023 (செவ்வாய்க்கிழமை) காலை 9 மணி அளவில் கோடம்பாக்கம் ஆற்காடு ரோட்டில், எண் 87/89 உள்ள காஞ்சி மணிமொழியார் வளாகத்தில் உள்ள குறளகத்தில் நடைபெற்றது.*

*பிறந்தநாள் விழாவில் அவருடைய திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி வாழ்த்து தெரிவித்தனர். மேலும் அனைவருக்கும் குடிநீர், மோர், குளிர்பானம், தேனீர், நூல்கள், உணவு வழங்கப்பட்டது.*

*இதில் தலைமைச் செயலாளரும் ஆயிரம்விளக்கு தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கு.க.செல்வம். வட்டச் செயலாளர் ந.மோ.முரளி, ச.தேவராஜ். எஸ்.கண்ணதாசன், சந்துரு. ராமச்சந்திரன், நரேந்திரன், ஆட்டோ ரவி,காங்கிரஸ் ராஜசேகர், ஹெல்த் சண்முகம் மற்றும் கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.*

*காஞ்சி மணிமொழியார் தமிழ்ப்பேரவை சார்பில் புரவலர் நா.இளவரசு, செம்மொழி, சா.மணிவண்ணன் ஆகியோர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.*



காஞ்சிபுரம் மாநகராட்சியில் 3, பகுதி கழகம் சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டாம் ஆண்டின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் மாவட்டக் கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழகப் பொருளாளரும் நாடாளுமன்றக் குழு தலைவருமான டி.ஆர்.பாலு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், கழக மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., ப.அப்துல் மாலிக், காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி பூத் கமிட்டி பார்வையாளர் டாக்டர் சுபேர்கான், மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மேயர் மகாலட்சுமி, சன்பிராண்ட் ஆறுமுகம், பகுதி செயலாளர் அ.தசரதன், சாந்தி சீனிவாசன் உள்ளிட்ட மாநகர நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வார்டுச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.